## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 27/2015 C/W O.S 122/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சந்திரசேகர் (எ) சந்திரசேகரன் | நாள் | 14.02.2023 |
| தகப்பனார் பெயர் | சண்முகம் | | |

**1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

25) அ.வ.எண்.122/2015 என்ற வழக்கை 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் இவ்வழக்கில் வாதிகளாக உள்ள வெள்ளையம்மாள், பெரிய கவுண்டர், பெருமாயி, சந்திரசேகர் (சாட்சி), குணசேகரன் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்றால், சரிதான்.

26) மேற்படி அ.வ.எண்.122/2015 என்ற வழக்கில் 12.01.1992ம் தேதிய குதவை பத்திரத்தை பற்றி பிரதிவாதிகள் கூறியுள்ளனர் என்றால், மேற்படி பத்திரத்ை பற்றி எனக்கு தெரியும். ஆனால் அதைப்பற்றி வழக்கில் கூறியுள்ளனரா என்று எனக்கு தெரியாது.

27) மேற்படி 12.01.1992ம் தேதியில் 1ம் பிரதிவாதியின் கணவர் கோவிந்தராஜ் என்பவர் ஆனந்த கவுண்டர் மக்கள் பெரியா கவுண்டர் மற்றும் பெருமாள் ஆகியோர்களிடமிருந்து ரூ.7000/–த்தை பெற்றுக்கொண்டு மறுபயனாக மேற்படி குதவை பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. என் தந்தை சண்முகம் தான் மேற்படி குதவை பத்திரத்தை எழுதிக்கொடுத்துள்ளார்.

28) நான் சொல்வது போல் என் தந்தை சண்முகம் மேற்படி ஆவணத்தில் சாட்சி கையெழுத்து மட்டும்தான் போட்டுள்ளார் என்றாலும், மேற்படி குதவை ஆவணத்தை கோவிந்தராஜ் என்பவர்தான் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால், என் தந்தை எழுதிக்கொடுத்ததாக நான் நினைத்துக்கொண்டேன். என் தந்தை எழுதிக்கொடுத்தார் என நான் கேள்விப்பட்டுள்ளேன். நேரடியாக எனக்கு தெரியாது.

29) அ.வ.எண்.122/2015 என்ற வழக்கில் கூறியுள்ள சங்கதிகள் குறித்து இன்று வரை எனக்கு தெரியாது என்றால், சரிதான். 1ம் பிரதிவாதியின் கணவர் கோவிந்தராஜ் என்பவர் 10.05.1992ம் தேதியில் இறந்துவிட்டார் என்றால், சரிதான்.

30) மேற்படி குதவை பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சர்வே எண்களிலுள்ள சொத்துக்களை 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரிதான். 2002ம் ஆண்டு 1ம் பிரதிவாதி ச.எண்.356/7A2 மற்றும் ச.எண்.356/7A4 ஆகிய நிலங்களை குதவை தொகையை குத்தகைதாரரிடம் கொடுத்து தானே நிலத்தில் விவசாயம் செய்துகொள்வதாக என் தந்தையிடம் கூறினார். அதன் அடிப்படையில் ரூ.7000/– குதவை தொகையை குத்தகைதாரரிடம் கொடுத்துவிட்டு நிலத்தை மீட்டு 1ம் பிரதிவாதியே விவசாயம் செய்து வந்தார். குழந்தைகள் சிறியவர்களாக இருந்ததால் சொத்தை பிற்காலத்தில் பாகபிரிவினை செய்து கொள்ளலாம் என என் தந்தை கூறிவிட்டார்.

31) கோவிந்தராஜிக்கு வாய்மொழியாக பாகமாக பிரிந்த நிலத்தை தான் அவர் குதவைக்கு வைத்திருந்தார் என்றாலும், மேற்படி கோவிந்தராஜ் இறந்ததற்கு பின்னர் 1ம் பிரதிவாதி குதவை தொகையை செலுத்தி நிலத்தை மீட்டு விவசாயம் செய்து வருகிறார் என்றாலும், என் தந்தையிடம் கேட்டுதான் மேற்படி நிலத்தை மீட்டதாக நான் சொல்வது தவறானது என்றால், சரியல்ல. 1ம் பிரதிவாதி என் தந்தையிடம் கேட்கும்போது நாங்கள் அனைவரும் அங்கு இருந்தோம்.

32) மேற்படி குதவை வைத்ததை பற்றியோ, 1ம் பிரதிவாதி அதை மீட்டதை பற்றியோ, என் தந்தையிடம் அனுமதி கேட்டதாக கூறியுள்ளதை பற்றியோ, என் வழக்குரையிலோ, என் பிரமாண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால், சரிதான்.

33) இவ்வழக்கு நிலுவையில் இருக்கும்போது நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்திருந்தார் என்றால், சரிதான். மேற்படி அறிக்கையை நான் படித்து பார்க்கவில்லை.

( 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.